**1. பொதுமக்கள் தாங்கள் பெறும் சரக்கு அல்லது சேவைக்கான விலைப்பட்டியலை கேட்டுப் பெறுவதை ஊக்குவிக்கும் விதமாக வணிகவரித்துறையில் 'எனது விலைப்பட்டியல் – எனது உரிமை' என்ற திட்டம் செயல்படுத்தப்படும்.**

சரக்கு அல்லது சேவைக்கான விலைப்பட்டியல்களை பொதுமக்கள் கேட்டுப் பெற்றால் மட்டுமே அரசுக்கான வரிவருவாய் விடுதலின்றி கிடைக்க ஏதுவாகும். எனவே, இதனை ஊக்குவிப்பதற்காக வணிகவரித்துறையில் '**எனது விலைப்பட்டியல் – எனது உரிமை**' என்ற திட்டம் செயல்படுத்தப்படும். பொதுமக்கள் தாங்கள் பெறும் விலைப்பட்டியல்களின் ஒளிநகல்களை வணிகவரித் துறையின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய கேட்டுக் கொள்ளப்படுவார்கள். காலமுறை அடிப்படையில் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். இதற்காக தொடர் செலவினமாக ரூ.1.22 கோடி மற்றும் தொடரா செலவினமாக ரூ.30.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**2. வணிகவரித்துறையில் வரி ஏய்ப்பினைத் தடுப்பதில் உதவுபவர்களுக்கு வெகுமதி அளிக்கப்படும்.**

வரி ஏய்ப்பு செய்வோர் குறித்து வணிகவரித் துறைக்கு தகவல் தெரிவிக்கும் பொதுமக்களுக்கும் வரி ஏய்ப்பினைக் கண்டுபிடித்து சிறப்பாக வரி வசூல் செய்யும் வணிகவரித் துறை அலுவலர்களுக்கும் வெகுமதி வழங்க நடப்பு ஆண்டில் ரூ.1.66 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**3. வணிகவரித்துறையின் நுண்ணறிவு பிரிவில் தனியார் தொழில்நுட்ப வல்லுநர்களின் சேவை பயன்படுத்தப்படும்.**

வணிகவரித் துறையின் நுண்ணறிவு பிரிவு நடத்தும் ஆய்வுகளின்போது சில நேர்வுகளில் வரி செலுத்துவோரின் கணினிகளில் உள்ள தரவுகள் மற்றும் செயல்பாட்டு மென்பொருட்களை முழுமையாக மீட்டெடுக்க இயலாத நிலை உள்ளது. இதனால் வரி ஏய்ப்பு விவரங்களை முழுமையாக அறிந்து கொள்ள முடிவதில்லை. இப்பணிக்கென சிறப்பு தொழில்நுட்ப உதவி தேவைப்படுவதால், இதில் தனியார் தொழில்நுட்ப வல்லுநர்களின் (Professionals) சேவை பயன்படுத்தப்படும். இதற்கென தொடர் செலவினமாக ரூ.38.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**4. வணிகவரித்துறையில் வரி ஆய்வுக் குழு அமைக்கப்படும்.**

வரி பகுப்பாய்வு, வரி ஏய்ப்பு மற்றும் வருவாய் பெருக்கம் தொடர்பாக வணிகவரித் துறையில் தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, இப்பணிக்கென '**வரி ஆய்வுக் குழு**' ஒன்று அமைக்கப்படும். இதற்கான தொடர் செலவினம் ரூ.22.00 இலட்சம் ஆகும்.

**5. வணிகவரித்துறையின் அழைப்பு மையம் (Call Centre) மேம்படுத்தப்படும்.**

2021-22 ஆம் ஆண்டில் வணிகவரித் துறையில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள அழைப்பு மையத்தின் (Call Centre) பணி நோக்கத்தை மேலும் விரிவுபடுத்துவதற்காக, வருவாய் வசூல் மற்றும் கண்காணிப்பு பிரிவானது கூடுதல் அலுவலர்களுடன் மேம்படுத்தப்படும். இதற்கான தொடர் செலவினம் ரூ.34.00 இலட்சம் ஆகும்.

**6. வணிகவரி கூடுதல் ஆணையர் தலைமையில் தனி தணிக்கைப் பிரிவு உருவாக்கப்படும்.**

வணிகவரித் துறையில் மாநில தலைமை கணக்காயரால் சுட்டிக்காட்டப்படும் குறைகளை நிவர்த்தி செய்து, சாத்தியமான வரி வருவாயைப் பெருக்குவதைக் கண்காணிப்பதற்காக வணிகவரி கூடுதல் ஆணையர் தலைமையில் தனி தணிக்கைப் பிரிவு ஒன்று உருவாக்கப்படும். இதற்கான தொடர் செலவினமாக ரூ.69.14 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**7. சென்னை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள இரண்டு இணை ஆணையர் நுண்ணறிவு பணியிடங்கள் கூடுதல் ஆணையர் நிலைக்கு தரம் உயர்த்தப்படும்.**

வணிகவரித் துறையின் நுண்ணறிவுப் பிரிவில் கண்காணிப்பை மேலும் மேம்படுத்தும் பொருட்டும் வரி ஏய்ப்பைத் தடுக்கும் நோக்கிலும் சென்னை–II மற்றும் கோயம்புத்தூர் நுண்ணறிவு கோட்ட இணை ஆணையர் நிலையிலான பதவிகள் கூடுதல் ஆணையர் நிலைக்கு தரம் உயர்த்தப்படும். இதற்காக தொடர் செலவினமாக ரூ.19.34 இலட்சம் செலவு மேற்கொள்ளப்படும்.

**8. வணிகவரித் துறையில் பயிற்சி நிலைய இயக்குநர் பணியிடம் தரம் உயர்த்தப்பட்டு அவரது தலைமையின் கீழ் எளிய வணிக பிரிவு (Indirect Taxes Wing) உருவாக்கப்படும்.**

வணிகவரித் துறையில் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து சிறந்த பயிற்சி முறை திட்டங்களை செயல்படுத்தும் நோக்கில் பயிற்சி நிலைய இயக்குநர் பதவியானது கூடுதல் ஆணையர் தரத்திற்கு நிலை உயர்த்தப்படும். மேலும், பயிற்சி நிலைய இயக்குநர் / கூடுதல்

ஆணையர் தலைமையின் கீழ் 'எளிய வணிகப் பிரிவு' ஒன்று உருவாக்கப்படும். வணிகர்கள் மேற்கொள்ளும் பதிவு நடவடிக்கைகளுக்கு உதவி புரிதல், வரி திருப்புத் தொகை பெறுவதற்கு ஆவன செய்தல், சமூக வலைதளங்களின் மூலம் வரப்பெறக்கூடிய ஐயப்பாடுகளை களைதல் ஆகிய பணிகளை இப்பிரிவு மேற்கொள்ளும். இதற்கான தொடரா செலவினம் ரூ.100.14 இலட்சம் ஆகும்.

**9. வரி ஏய்ப்பைக் கண்டுபிடிக்க தேசிய தகவல் மையம் (National Informatics Centre) உருவாக்கியுள்ள GST PRIME என்ற மென்பொருள் ரூ.47.20 இலட்சம் செலவில் வாங்கி பயன்படுத்தப்படும்**

GST வரி அமல்படுத்தப்பட்ட பிறகு வணிகர்கள் தொடர்பான அனைத்து தரவுகளும் கணினி மூலமாகவே பகுப்பாய்வு செய்யப்பட்டு வரி ஏய்ப்பு தொடர்பான ஆய்வு கோப்புகள் தயாரிக்கப்படுகின்றன. இந்த பணிகளுக்காக தேசிய தகவல் மையத்தால் உருவாக்கப்பட்டுள்ள GST PRIME என்ற மென்பொருள் வணிகவரித் துறையால் வாங்கப்பட்டு பயன்படுத்தப்படும். இதற்கான தொடர் செலவினம் ரூ.49.56 இலட்சம் மற்றும் தொடரா செலவினம் ரூ.47.20 இலட்சம் ஆகும்.

**10. வணிக வரித் துறையில் சுற்றும் படையில் (Roving Squad) பணிபுரியும் அலுவலர்களுக்கு சீருடைகள் வழங்கப்படும்**

வணிகவரித் துறையின் நுண்ணறிவு பிரிவில் உள்ள சுற்றும் படையில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் ஓட்டுநர்கள் சரக்கு வாகனங்களை நிறுத்தி சோதனையிடும் பணியை மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அவர்களுக்கு நடப்பு நிதியாண்டு முதல் சீருடைகள் வழங்கப்படும். இதற்கான தொடர் செலவினம் ரூ.24.00 இலட்சம் ஆகும்.

**11. தீர்ப்பாயம் அல்லது உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் முந்தைய சட்டங்கள் தொடர்பான ஆணைகளில் வரி இழப்பு இனங்களைக் கையாள புதிய வழிமுறைகள் உருவாக்கப்படும்**

முந்தைய சட்டங்களின் கீழ் தீர்ப்பாயம் அல்லது உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் ஆணைகளில் சுமார் 95% வழக்குகளில் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படக்கூடிய நிலை உள்ளது. இவ்வாறான வழக்குகள் சுமார் 7,500 என்ற எண்ணிக்கையில் நிலுவையில் உள்ளன. எனவே இவ்வழக்குகளில் வெளியிடப்படக்கூடிய ஆணைகளில் வரி இழப்பு ஏற்படக்கூடிய இனங்களைக் கையாளுவதற்கு புதிய வழிமுறைகள் உருவாக்கப்படும்.

**12. வணிகவரித் துறையில் இரண்டு அலுவலக கட்டடங்கள் ரூ.7.80 கோடி செலவில் புனரமைக்கப்படும்.**

சென்னை மத்திய கோட்டத்திலுள்ள மயிலாப்பூர் வட்டாட்சியர் அலுவலக கட்டடத்தில் இயங்கி வரும் வணிகவரி அலுவலகமும் மதுரை ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகமும் 2022-23-ஆம் ஆண்டில் புனரமைக்கப்படும். இதற்கான தொடரா செலவினம் ரூ.7.80 கோடி ஆகும்.

**13. பொதுமக்களுக்கு பத்திரப்பதிவு தொடர்பான சேவைகளை அளிக்க 'ஒருங்கிணைந்த சேவை மையம்' ரூ.1.00 கோடி செலவில் உருவாக்கப்படும்.**

பதிவுத்துறையின் சேவையினை நாடிவரும் பொதுமக்களுக்கு வழிகாட்டி மதிப்பு வழங்குதல், வில்லங்க சான்று வழங்குதல், பதிவுக்கான முன்பதிவு செய்தல், ஆவணம் தயாரித்து வழங்குதல், இணையவழி கட்டணங்கள் செலுத்துதல் ஆகிய சேவைகளை வழங்குவதற்காக 'ஒருங்கிணைந்த சேவை மையம்' சென்னை மற்றும் கோயம்புத்தூரில் சோதனை அடிப்படையில் உருவாக்கப்படும். இதற்காக தொடரா செலவினமாக ரூ.1.00 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்படும்.

**14. சார்பதிவாளர் அலுவலகங்களில் பொதுமக்களுக்கான தேவைகளை நிறைவு செய்யும் வகையில் ரூ.50.00 இலட்சம் செலவில் சிறப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.**

அதிக பதிவுகள் நடைபெறும் பதிவு அலுவலகங்களில் உள்ள அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் வசதிகள் பொதுமக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் மேம்படுத்தப்படும். முதற்கட்டமாக, 2 சார்பதிவாளர் அலுவலகங்கள் தேர்வு செய்யப்பட்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இதற்கு தொடரா செலவினமாக ரூ.50.00 இலட்சம் செலவிடப்படும்.

**15. பதிவுத்துறையில் ஒருங்கிணைந்த தகவல் மையம் (Unified Call Centre) ரூ.50.00 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.**

பதிவு தொடர்பான புகார்கள் பதிவுத்துறை தலைவர் அலுவலகத்தில் அமைந்துள்ள கட்டுப்பாட்டு அறையில் தற்போது தொலைபேசி வழியாக பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பதிவுத்துறையின் குறை தீர்க்கும் சேவைகள் வாட்ஸ்ஆப் போன்ற சமூக வலைதள வசதிகள் மூலமாகவும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கான தொடரா செலவினம் ரூ.50.00 இலட்சம் ஆகும்.

**16. திருமண சான்றுகளில் திருத்தம் செய்வதற்காக இணையவழியாக விண்ணப்பிக்கும் வசதி ரூ.6.00 இலட்சம் செலவில் அறிமுகப்படுத்தப்படும்.**

பதிவு செய்யப்பட்ட திருமணங்களுக்கான சான்றுகளில் திருத்தம் தேவைப்படின் பதிவுத்துறை அலுவலகங்களுக்கு நேரில் வராமல் இணையவழியாகவே விண்ணப்பித்து திருத்திய சான்றினைப் பெறும் வசதி ரூ.6.00 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

**17. அவசர நிமித்தமாக பதிவு செய்ய விரும்பும் பொதுமக்களின் வசதிக்காக ஆவணப்பதிவிற்கான முன்பதிவு டோக்கன் வழங்குவதில் 'தட்கல்' முறை அறிமுகப்படுத்தப்படும்.**

பதிவு செய்ய விரும்பும் பொதுமக்களில் சிலர் குறுகிய கால அவகாசத்தில் ஆவணப்பதிவை மேற்கொள்ள விரும்புகின்றனர். இவர்களின் வசதிக்காக ஆவணப்பதிவிற்கான முன்பதிவு டோக்கன்களை கூடுதல் கட்டணம் பெற்று 'தட்கல்' முறையில் வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்படும். முதற்கட்டமாக, அதிக எண்ணிக்கையிலான ஆவணப்பதிவுகள் நடைபெறும் 100 சார்பதிவாளர் அலுவலகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும். ஒரு அவசர முன்பதிவு டோக்கனுக்கு ரூ.5,000/- கட்டணமாக விதிக்கப்படும்.

**18. அலுவலகங்களில் பணியாற்றும் பொதுமக்களின் வசதிக்காக விடுமுறை நாளன்று பதிவுப் பணியை மேற்கொள்ளும் வகையில் சார்பதிவாளர் அலுவலகங்கள் சனிக்கிழமைகளிலும் செயல்படும்.**

அலுவலகங்களில் பணியாற்றும் பொதுமக்கள் தாங்கள் ஆவணப்பதிவு மேற்கொள்ள ஏதுவாக வார விடுமுறை நாளன்று சார்பதிவாளர் அலுவலகங்கள் செயல்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு, சனிக்கிழமைகளிலும் பதிவுப்பணி மேற்கொள்ளப்படும். இதற்கு கட்டணமாக ரூ.1000/- வசூலிக்கப்படும்.

**19. பதிவு நடைமுறைகள் தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ரூ.38.00 இலட்சம் செலவில் மாவட்டங்கள் தோறும் சிறப்பு விழிப்புணர்வு கருத்தரங்கங்கள் நடத்தப்படும்.**

பதிவுத்துறை வழங்கும் சேவைகள் தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் துறையின்

இணையதள வசதிகளை எளிய முறையில் தாங்களாகவே பயன்படுத்திக் கொள்ள அவர்களை தயார்படுத்தும் வகையிலும் 38 மாவட்டங்களிலும் பொதுமக்களுக்கான சிறப்பு விழிப்புணர்வு கருத்தரங்கங்கள் நடத்தப்படும். இதற்கான தொடரா செலவினமாக ரூ.38.00 இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்படும்.

**20. அரசு நிலங்கள் பதிவு செய்யப்படுவதை ஆரம்ப நிலையிலேயே 'STAR' மென்பொருள் வழியாக தன்னிச்சையாக தடுக்கும் திட்டம் ரூ.12.00 இலட்சம் செலவில் அறிமுகப்படுத்தப்படும்.**

சொத்து ஆவணங்கள் பதிவிற்காக தேவையான விவரங்களை இணையவழியாக உள்ளீடு செய்யும்போதே அரசு நிலங்கள், நீர் நிலை புறம்போக்குகள், இந்து சமய அறநிலையத்துறை நிலங்கள், வக்ஃப் வாரிய நிலங்கள் மற்றும் பிற தடை செய்யப்பட்ட நிலங்களைக் குறித்த விவரங்கள் உள்ளீடு செய்யப்பட்டால் ஆரம்ப நிலையிலேயே இதனைத் தடுப்பதற்காக, பதிவுத்துறையின் மென்பொருளில் உரிய மாற்றங்கள் செய்யப்படும். இதன் மூலம் மேற்கண்ட நிலங்களைப் பதிவு செய்வது தன்னிச்சையாகவே தடுக்கப்படும். இதற்காக தொடரா செலவினமாக ரூ.12.00 இலட்சம் செலவிடப்படும்.

**21. பதிவுத்துறையிலுள்ள மிகப் பழமையான 50 கட்டடங்களை அப்புறப்படுத்தி ரூ.96.64 கோடி செலவில் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.**

பதிவுத்துறைக்கு சொந்தமாக உள்ள கட்டடங்களில் 148 சார்பதிவாளர் அலுவலக கட்டடங்களும் ஒரு மாவட்டப்பதிவாளர் கட்டடமும் மிகவும் பழமையாக உள்ளன. இவற்றில் முதற்கட்டமாக 50 கட்டடங்கள் அப்புறப்படுத்தப்பட்டு, நவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் கட்டப்படும். இதற்கான

தொடரா செலவினமாக ரூ.96.64 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்படும்.

**22. பதிவுத்துறையில் ஆவண எழுத்தர் உரிமங்கள் புதிதாக வழங்கப்படும்.**

தமிழகத்தில் 1998–க்கு பின்னர் புதிதாக ஆவண எழுத்தர் உரிமங்கள் வழங்கப்படவில்லை. பதிவுக்கு வரும் ஆவணங்களின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து வருவதால், கூடுதல் ஆவண எழுத்தர்களை நியமிக்க வேண்டிய நிலை எழுந்துள்ளதைக் கருத்தில் கொண்டு உரிய அமைப்பு மூலம் சிறப்பு பொதுத் தேர்வு நடத்தப்பட்டு ஆவண எழுத்தர்களுக்கான புதிய உரிமம் வழங்கப்படும். இதன் மூலம் ஏறத்தாழ 20,000 நபர்கள் பயன் பெறுவர்.

**23. பதிவுத்துறையில் கட்டட களப்பணி மேற்கொள்வதற்காக பொறியியல் பட்டதாரிகளுக்கு 'களப்பணி மேற்பார்வையாளர் உரிமம்' வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.**

ஆவணங்களில் குறிப்பிடப்படும் கட்டட மதிப்பினைப் பொருத்து சார் பதிவாளர்களால் அல்லது பொதுப் பணித் துறையிலிருந்து பதிவுத் துறையில் பகராண்மையில் பணிபுரியும் பொறியாளர்களால் கட்டடங்கள் நேரில் ஆய்வு செய்யப்பட்டு **கட்டட மதிப்பு** உறுதி செய்யப்படுகிறது. சார்பதிவாளர்கள் பதிவுப்பணியில் கூடுதல் கவனம் செலுத்த ஏதுவாக, இக்கட்டடங்**களை நேரில் ஆய்வு செய்து அறிக்கை அளிப்பதற்காக** கட்டட பொறியியல் பட்டதாரிகளின் சேவை **பயன்படுத்தப்படும்**. **இதற்காக அவர்களுக்கு** 'களப்பணி மேற்பார்வையாளர் உரிமம்' **வழங்கும் திட்டம்**

**அறிமுகப்படுத்தப்படும். உரிய விதிமுறைகளும் இதற்கென தனியே உருவாக்கப்படும்.**

**24. சங்கங்களின் ஆண்டறிக்கைகள் உள்ளிட்ட ஆவணங்களின் தாமத கோர்வைக்காக விதிக்கப்படும் அபராதத் தொகையை வசூலிக்க சமாதான திட்டம் செயல்படுத்தப்படும்.**

தமிழ்நாடு சங்கப்பதிவு சட்டத்தின் கீழ் ஆண்டறிக்கைகள் மற்றும் ஆவணங்கள் தாமதமாக கோர்வை செய்யப்பட்டால் அதன்மீது அபராதத் தொகை வசூலிக்கப்படுகிறது. இத்தொகையை கட்ட தயங்கி பல சங்கங்கள் ஆண்டறிக்கை மற்றும் ஆவணங்களை கோர்வை செய்யாமல் உள்ளன. அபராதத் தொகை செலுத்த வேண்டி நிலுவையில் உள்ள சங்கங்களின் ஆண்டறிக்கைகள் கோர்வை செய்யப்படுவதை ஊக்குவிக்கும் விதமாக 'அபராதத் தொகைக்கான சமாதான திட்டம்' நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டம் ஒரு முறை தீர்வாக செயல்படுத்தப்படும்.

**25. முத்திரைத்தாள் விநியோக சீர்திருத்தம் மேற்கொள்ள ஏதுவாக இந்திய முத்திரைச் சட்டம், 1899–ல் உரிய சட்ட திருத்தம் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.**

பதிவுத்துறையில் தற்போது மிகக்குறைந்த முக மதிப்புடைய ரூ.10/–, ரூ.20/–, ரூ.50/– ஆகிய முத்திரைத்தாள்களின் பயன்பாட்டினை மாற்றி குறைந்தபட்சமாக ரூ.100/– என நிர்ணயித்து நடைமுறைப்படுத்தும் வகையில் இந்திய முத்திரைச் சட்டம், 1899–ல் உரிய திருத்தம் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.

**26. சென்னை பதிவு மண்டலம் பிரிக்கப்பட்டு இரண்டு மண்டலங்கள் உருவாக்கப்படும்.**

பதிவுத்துறையின் மொத்த வருவாயில் 40 சதவிகிதம் (ரூ.5,664.86 கோடி) பங்களிக்கும் சென்னை மண்டலத்தில், மிக அதிக எண்ணிக்கையில் பதிவுகள், அதிக மதிப்புள்ள சொத்து பதிவுகள், பன்முகத்தன்மை கொண்ட ஆவணப் பதிவுகள் நடைபெற்று வருகின்றன. எனவே, நிர்வாகத்தை எளிமையாக்கி மேம்படுத்தும் நோக்கில் சென்னை பதிவு மண்டலமானது, சென்னை (வடக்கு) மற்றும் சென்னை (தெற்கு) என இரு பதிவு மண்டலங்களாக பிரிக்கப்படும். இதற்காக தொடர் செலவினமாக ரூ.75.24 இலட்சம் மற்றும் தொடரா செலவினமாக ரூ.26.10 இலட்சம் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**27. மதுரை பதிவு மண்டலம் பிரிக்கப்பட்டு இரு மண்டலங்கள் உருவாக்கப்படும்.**

பதிவு மண்டலங்களில் மிக அதிகமாக 103 சார்பதிவாளர் அலுவலகங்களைக் கொண்டுள்ள மதுரை பதிவு மண்டலமானது 3 மாநகராட்சிகள், 6 வருவாய் மாவட்டங்கள் மற்றும் 9 பதிவு மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது. எனவே, நிர்வாக நலன் கருதி மதுரை மண்டலத்தினைப் பிரித்து இரண்டு பதிவு மண்டலங்கள் உருவாக்கப்படும். இதற்காக தொடர் செலவினமாக ரூ.75.24 இலட்சம் மற்றும் தொடரா செலவினமாக ரூ.26.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**28. சென்னை மண்டலத்தில் தாம்பரத்தை தலைமையிடமாகக் கொண்டு கூடுதலாக ஒரு பதிவு மாவட்டம் உருவாக்கப்படும்.**

சென்னை மண்டலத்தின் 48 சதவிகித வருவாயையும் மாநிலத்தின் 20 சதவிகித வருவாயையும் ஈட்டித் தரும் தென் சென்னை பதிவு மாவட்டத்தில் 17 சார்பதிவகங்கள் உள்ளன.

புறநகர் பகுதிகள் வேகமாக வளர்ச்சியடைந்து வருவதால், தென்சென்னை பதிவு மாவட்டத்தைப் பிரித்து தாம்பரத்தை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய பதிவு மாவட்டம் உருவாக்கப்படும். இதற்கான தொடர் செலவினம் ரூ.92.75 இலட்சம் மற்றும் தொடரா செலவினம் ரூ.34.40 இலட்சம் ஆகும்.

**29. கோயம்புத்தூர் பதிவு மாவட்டத்தைப் பிரித்து இரு பதிவு மாவட்டங்கள் உருவாக்கப்படும்.**

கோயம்புத்தூர் மண்டலத்தின் 58 சதவிகித வருவாயையும் மாநிலத்தின் 10 சதவிகித வருவாயையும் ஈட்டித் தருவதாக கோயம்புத்தூர் பதிவு மாவட்டம் உள்ளது. புறநகர் பகுதிகளின் வேகமான வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு கோயம்புத்தூர் பதிவு மாவட்டத்தைப் பிரித்து கோயம்புத்தூர் (வடக்கு) மற்றும் கோயம்புத்தூர் (தெற்கு) என இரண்டு பதிவு மாவட்டங்கள் உருவாக்கப்படும். இதற்காக தொடர் செலவினமாக ரூ.90.23 இலட்சம் மற்றும் தொடரா செலவினமாக ரூ.34.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**30. பதிவுத்துறையில் ஐந்து மாவட்டப்பதிவாளர் (தணிக்கை) பணியிடங்கள் உருவாக்கப்படும்.**

**புதியதாக உருவாக்கப்படவுள்ள தாம்பரம் மற்றும் கோயம்புத்தூர்** (**தெற்கு**) **பதிவு மாவட்டங்களிலும் தற்போது மாவட்டப்பதிவாளர்** (**தணிக்கை**) **பணியிடங்கள் இல்லாத சேலம்** (**கிழக்கு**), **கோபிசெட்டிபாளையம் மற்றும் காரைக்குடி பதிவு மாவட்டங்களிலும் புதிதாக மாவட்டப்பதிவாளர்** (**தணிக்கை**) **பணியிடங்கள் உருவாக்கப்படும்**. இது தொடர்பாக, தொடர் செலவினமாக ரூ.196.00 இலட்சம் மற்றும் தொடரா செலவினமாக ரூ.91.00 இலட்சம் செலவு மேற்கொள்ளப்படும்.

**31. சீட்டு மற்றும் சங்கங்கள் செயல்பாடுகளை திறம்பட கண்காணிப்பதற்காக 26 மாவட்ட தலைநகர்களிலுள்ள நிர்வாக மாவட்டப்பதிவாளர் பணியிடங்கள் உதவி பதிவுத்துறை தலைவர் நிலைக்கு தரம் உயர்த்தப்படும்.**

**சீட்டு மற்றும் சங்கங்களின் செயல்பாடுகளைத் திறம்பட கண்காணிப்பதற்காகவும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள வருவாய் மாவட்டங்களைக் கருத்தில் கொண்டும் தேர்ந்தெடுக்கப்படும்** 26 **மாவட்ட தலைநகர்களில் உள்ள நிர்வாக மாவட்டப்பதிவாளர் பணியிடங்கள் உதவி பதிவுத்துறை தலைவர் நிலைக்கு தரம் உயர்த்தப்படும்**. இதற்கான தொடரா செலவினம் ரூ.15.00 இலட்சம் ஆகும்.

**32. சிறப்பாக செயல்படும் பதிவுத்துறை அலுவலர்களை ஊக்குவிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்**

பதிவுத்துறையில் அரசின் ஆண்டு வருவாய் இலக்கினை அடைதல், ஆவணத்தை விரைவாக திரும்ப வழங்குதல், தணிக்கை குறை நிவர்த்தி செய்தல் போன்ற பணிகளில் சிறப்பாக பணியாற்றும் சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு இனங்களின் கீழ் சிறப்பு விருதுகள் வழங்கப்படும். இதற்காக தொடர் செலவினமாக ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.